பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண்: 680 **நாள்: 15.11.2026**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொதுக் கழிப்பிட மேலாண்மைத் திட்டத்தின் கீழ், இதுவரை 853 இடங்களில் இலவச ஒப்பனை அறைகள் 7644 கழிப்பிட இருக்கைகளுடன் அமைக்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி. எஸ். சமீரன், இ.ஆ.ப.,அவர்கள் தகவல்

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ். சமீரன், இ.ஆ.ப., அவர்கள், இன்று (15.11.2026) அண்ணா மண்டலம், அண்ணா நகர் டவர் பூங்காவில் உள்ள இலவசப் பொதுக் கழிப்பறையில் திடீர் ஆய்வு மேற்கொண்டு, பொதுமக்கள் மற்றும் பூங்காவிற்கு வருகை தரும் பயனாளர்களிடம் அதன் பயன்பாடு மற்றும் பராமரிப்பு குறித்து கருத்துகளைக் கேட்டறிந்தார்.

பின்னர், மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் தெரவித்ததாவது.

சென்னை மாநகரில் பொதுமக்களுக்கு நல்ல சுகாதார வசதிகளை ஏற்படுத்தித் தருதல் மற்றும் திறந்தவெளியில் மலம் கழிப்பதைத் தவிர்த்தல் ஆகியவற்றை முக்கிய நோக்கமாக கொண்டு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஏற்கனவே உள்ள கழிப்பறைகளை சுகாதாரமாகப் பராமரித்தல் மற்றும் புதிய கழிப்பறைகள் கட்டுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மக்கள் பயன்பெறும் வகையிலும், தூய்மையாகவும், பாதுகாப்பாகவும், எளிதாக பயன்படுத்தக் கூடியதாகவும் இருக்கும் வகையிலும் சென்னை மாநகரின் பல பகுதிகளில் பொதுக் கழிப்பிட மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 1,479 இடங்களில் இலவச ஒப்பனை அறைகள் 10,444 கழிப்பிட இருக்கைகள் அமைத்திட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில், நான்கு சிப்பங்களாக பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவற்றில், 853 இடங்களில் 7644 இருக்கைகளுடன் அமைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. 193 இடங்களில் 1270 இருக்கைகளுடன் கழிப்பறை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

மேலும், 433 இடங்களில் 1530 இருக்கைகளுடன் ஒப்பனை அறைகள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தக் கழிப்பறைகள் பொதுமக்கள் கட்டணமில்லாமல் பயன்படுத்தும் வகையில் செயல்பட்டு வருகிறது. மேலும், சென்னை மாநகரின் முக்கியப் பகுதிகளிலும், மக்கள் அதிகம் கூடுமிடங்களிலும் முறையான களஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அந்த இடங்களுக்கு ஏற்ற

வகையில் பொதுக்கழிப்பிடங்கள் கட்டப்பட்டுள்ளன. மழை மற்றும் வெயிலிலிருந்து பாதுகாப்பு, காற்றோட்டம், வெளிச்சம் ஆகியவற்றை கருத்தில் கொண்டும், முதியோர், மாற்றுத்திறனாளிகள், குழந்தைகள் மற்றும் திருநங்கைகள் எளிதாகப் பயன்படுத்தும் வகையிலும் பாதுகாப்பு உள்ளிட்ட சிறப்பு ஏற்பாடுகளுடனும் இந்தக் கழிப்பிடங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு கழிப்பிடத்திற்கும் தனித்தனியாக பணியாளர்கள் அமர்த்தப்பட்டு, அட்டவணையின்படி தொடர்ந்து சுத்தம் செய்து பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்தப் பணியாளர்களின் பாதுகாப்பிற்காக கையுறை, முகக்கவசம், காலணிகள் உள்ளிட்ட பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், இவர்களுக்கு பாதுகாப்பு நடைமுறைகள், ரசாயனங்களை முறையாக கையாளுதல், தனிப்பட்ட சுகாதாரம் குறித்தும் தொடர் பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இந்தக் கழிப்பிடங்களில் மக்களின் கருத்துகளைப் பெறவும், குறைகள் இருப்பின் அவற்றை விரைந்து நிவர்த்தி செய்யவும் QR CODE வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பெறப்படும் புகார்கள் பதிவு செய்யப்பட்டு, குறிப்பிட்ட காலத்திற்குள் தீர்வும் காணப்படுகிறது. புகாரின் நிலை குறித்து பயனாளர்களுக்கு தகவலும் வழங்கப்படுகிறது.

மேலும், மக்களின் தேவைக்கேற்ப மாநகராட்சிப் பூங்காக்கள், மயானபூமிகள் உள்ளிட்ட இடங்களிலும் கழிப்பிடங்கள் கட்டப்பட்டு பராமரிக்கப்பட உள்ளது.

இந்த பொதுக் கழிப்பிட மேலாண்மைத் திட்டமானது திறந்தவெளியில் மலம் மற்றும் சிறுநீர் கழிப்பதைத் தவிர்த்து பொதுசுகாதாரத்தை மேம்படுத்துகிறது. பெருநகர சென்னை மாநகராட்சியின் நகர சுகாதாரத்தில் ஒரு மைல்கல்லாகவும், நாட்டிலேயே ஒரு முன்மாதிரித் திட்டமாகவும் விளங்குகிறது எனத் தெரிவித்தார்.

செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள்தொடர்பு அலுவலர்,

பெருநகர சென்னை மாநகராட்சி.